பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

M.A.M.Ramasamy Tamilvidu Dutu Literary Special

Dr. S. Vanitha

Assistant Professor, Dharmapuram Gnanambigai Govt. Arts College, Mayiladuthurai, India

Manuscript ID : **MT1A0008**

Volume : **1**

Issue : **1**

Month : **September**

Year : **2021**

Received: 21.08.2021

Revised: 26.08.2021

Accepted: 02.09.2021

Published: 05.09.2021

Pages : 86-99

ABSTRACT:

Three generations in the history of Tamil Nadu fought for education. Among them Raja Sir Annamalai King, Raja Sir M.A.M.Muthiah Chettiar and Raja Sir M.A.M. Ramasamy Chettiar are notable. All three of them formed the Annamalai University and did an excellent academic job. No one can deny that millions of students have been educated and risen to prominence around the world today. This essay reveals the life of Raja Sir M.A.M.Ramasamy Chettiar, one of such achievers, in a new perspective.

KEYWORDS:

Palace, Muthamil, Annamalai University, Prochancellor, Industrialist, Classical Tamil, Spirituality, endowments

REFERENCES :

1. Durai. Pattabhiraman, Inaivendher Moovar, Priya Publishing, Chidambaram.
2. Durai.Pattabiraman, Inaivendhar M.A.M.Ramasamy Thamizh Vidu Thoodhu Padarkanni.

எம்.ஏ.எம்.இராமசாமி தமிழ்விடு தூது இலக்கியச் சிறப்பு

முனைவர் ச.வனிதா,
உதவிப்பேராசிரியர்
தமிழியல்துறை, தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கல்லூரி,
மயிலாடுதுறை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழக வரலாற்றில் மூன்று தலைமுறையினர் கல்விக்காகப் பாடுபட்டனர். அவர்களுள் இராஜா சர் அண்ணாமலை அரசர், இராஜா சர் எம்.ஏ.எம்.முத்தையா செட்டியார், இராஜா சர் எம்.ஏ.எம்.இராமசாமி செட்டியார் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் மூவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி மிகச் சிறந்த கல்விப் பணி ஆற்றியவர்கள். பல இலட்சம் மாணவர்கள் கல்வி அறிவு பெற்று இன்று உலகெங்கும் உயர்ந்துள்ளனர் என்பதை யாவரும் மறுக்கவியலாது. அத்தகைய சாதனையாளர்களில் ஒருவரான இராஜா சர் எம்.ஏ.எம்.இராமசாமி செட்டியா அவர்களின் வாழ்வியலைப் புதிய நோக்கில் ;தமிழ்விடு தூது நூலாக்கம் செய்தவர் பேராசிரியர் துரை.பட்டாபிராமன் அவர்கள் புதிய முயற்சியில் உருவான எம்.ஏ.எம்.இராமசாமி தமிழ் விடு தூது நூலின் சிறப்பை இக்கட்டுரையாக்கம் வெளிப்படுத்துகிறது.

கருச்சொற்கள்

அரண்மனை, முத்தமிழ், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இணைவேந்தர், தொழிலதிபர், செந்தமிழ் ஆன்மீகம், அறக்கட்டளை

முன்னுரை

பாட்டுடைத்தலைவரான எம்.ஏ.எம்.இராமசாமி மரபு வழி சிறந்த குடிப்பிறப்பும் ஆழ்ந்த கல்வி ஞானமும் பரந்த அனுபவமும் ஒருங்கே பெற்றவர். இவரின் பன்முகச் சிறப்புக்களை துரை.பட்டாபிராமன் இயற்றிய இணைவேந்தர் எம்.ஏ.எம்.இராமசாமி தமிழ்விடு நூலில் இடம்பெற்றுள்ளதை ஆய்வதே இப்பகுதியின் நோக்கமாகும். இதற்கு அரணாக இருக்கும் இணைவேந்தர் மூவர்' என்ற நூலும் இந்நூலாசிரியரால் இயற்றப்பட்டுள்ளதால் அதனையும் இணைத்து ஒப்புநோக்கி இவ்வியல் ஆராயப்படுகின்றது. இதில், இளமையும் கல்வியும், மனவியல் நிகழ்வு, பண்புநலன், ஆன்மிக அறங்களும் ஆலயத் திருப்பணிகளும் கல்வி அறக்கட்டளைகள், விளையாட்டு வீரர், பல்கலைக்கழக வளர்ச்சியும் இணைவேந்தர் பொறுப்பும், தமிழ்ப்பணி, தொழிலதிபர் இராமசாமி எனப் பகுத்துக் காணலாம்.

இளமையும் கல்வியும்

இராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் இரண்டாவது மகனாக இராணி மெய்யம்மை ஆச்சிக்கு 1931ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் நாள் பிறந்தவர் இராமசாமி. குழந்தைப் பருவம் முதல் பாட்டுடைத்தலைவரும் இவரின் அண்ணன் குமாரராஜா முத்தையா அவர்களும் ஓர் ஆங்கிலேய இந்தியப் பெருமாட்டியால் வளர்க்கப்பட்டார்கள். அவ்வம்மையாரின் வளர்ப்பு முறையே இவர்களைச் சிறந்த நன்மக்களாக உருவாக்கியது என்பர் அறிஞர்.[1]

தந்தை முத்தைய வேளும்,

“ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே

சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே” [2]

என்ற சான்றோர் வாக்குக்கு ஏற்ப மக்களை நல்லொழுக்கமுடையவராய் வளர்த்தார்.

இராமசாமி அவர்களின் கல்விப்பயணம் என்பது சென்னையில் உள்ள புகழ்பெற்ற சர்ச் பார்க் ஆங்கிலப்பள்ளி, சாந்தோம் உயர்நிலைப்பள்ளி, பி.எஸ். உயர்நிலைப் பள்ளிகளில் அமைந்தன. பின்னர் சென்னை விவேகானந்தர் கல்லூரியில் நான்காண்டுகள் பயின்று பி.ஏ.பட்டம் பெற்றார்.

பாட்டுடைத் தலைவரின் ஊர் அறிமுகத்தைத் தமிழ் விடு தூது நூல்,

“ஆனாத செந்தமிழ்போல் ஆர்த்தபுகழ் மிக்கதுவாம்

கானாடு காத்தான்என் காதலன் ஊர்” [3]

என்று சுட்டியுள்ளார்.

மணவியல் நிகழ்வு

எம்.ஏ.எம். இராமசாமி அவர்களுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்தம் மாமன் மகளான சிகப்பி ஆச்சியை 6.2.1952ஆம் ஆண்டு மணந்தார் இல்வாழ்க்கைச் சிறப்பை,

“மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை” [4]

என்ற வள்ளுவத்தின் வாக்குக்கு ஏற்ப நற்குணம். நற்செய்கைகளுடன் கணவன் வரவுக்குத் தக்க வாழ்க்கை நடத்தும் சிறப்பு மிக்கவராக, சிகப்பி ஆச்சி விளங்கினார்.

சிகப்பி ஆச்சி சென்னை அரசி மேரி கல்லூரியில் பி.ஏ.பட்டம் பெற்றவர். அறிவுக் கூர்மையும் அடக்கமும், எளிமையும் இரக்கமும் நிறைந்த செல்வர் திருமகளாக விளங்கியவர். வரும் விருந்தினரை அன்புடன் நேசிக்கும் பண்புமிக்கவர் என்பதை தூது நூலில்,

… சொல்லு வர்காண்

நற் சிகப்பி யாச்சியுடன் நாதராம் ராமசாமி

பொற்பாதம் தொட்டுன்னைப் போற்றி செய்வர் - இற்புகுந்த” [5]

என்பதால் அறியலாம்.

அன்புக் கணவருக்கும் பொதுநலப் பணிகளில் இவர் துணையாக இருந்து உதவி வருகின்றார். கணவருடன் வெளிநாடுகளுக்குச் சென்றமையால் பரந்த நோக்கமுடைய-வராகவும் திகழ்கின்றார். சிகப்பி ஆச்சி தெய்வத் திருவாக காட்சியளிக்கும் பாங்கை,

தகவார் பெருமாட்டி

தண்ணளிகள் செய்யும்

சிகப்பி என்னும் தெய்வத்

திருவார் - புகழுறையும்” [6]

என்பதால் உணரலாம்.

பாட்டுடைத் தலைவரின் பண்புநலன்

அண்ணாமலையரசர், முத்தைய வேள் ஆகிய முன்னோர் கொள்கைகளை ஏற்று வாழ்ந்து வருபவர், ‘இயற்றுதல், காத்தல், ஈட்டுதல், காத்தவற்றை வகுத்தல்’ ஆகிய கொள்கைகள் ஏற்றுக் கொண்டும் வாழ்ந்து வருபவர். மேலும் அவர் கொள்கையை அவரே மடல் வழி எழுதியுள்ளார். “தமிழ்ப் பண்பாடு வளரவும், ஊர்தோறும் தமிழ் இசை முழங்கவும் ஆன்மீகம் பரவவும், ஏழ்மை அகலவும் விளையாட்டரங்கில் இந்தியா முதன்மை பெறவும் நாளும் பொழுதும் அயராது உழைப்பேன்” [7] என்று கூறியுள்ளதால் அறியலாம். மக்கட் பண்பு கொண்டவர். உலகம் இன்னும் அழியாமல் இருப்பதற்கு இராமசாமியைப் போல் சிலர் இருப்பதால்தான் என்று கூறலாம். தனக்கெனப் புகழ் வேண்டாத் தன்மையாளர் இவர் என்பதை, இவர் தன் பெயரைக் குறிப்பிடும் போதெல்லாம் அரசர் என்ற பட்டத்தைச் சேர்க்காமல் ‘டாக்டர்’ என்பதை மட்டும் சேர்த்துக் கொள்ளும் பண்பாளர்.

“அரண்மனையில்

நற்சிகப்பி யாச்சியுடன்

நாதராம் ராமசாமி

பொற் பாதம் தொட்டுன்னைப்

போற்றிசெய் வார்” [8]

என்பதால் இல்வாழ்க்கைப் பண்பும் தமிழுக்கு வணங்கும் பண்பும் அவரிடம் இயல்பாய் இருந்ததைக் காட்டுகின்றது. பணியாளர்களின் குடும்பக் கவலைகளை வினவி, ஆதரவு தந்து பொருளுதவி செய்வதில் முன்னோடியாக இருப்பவர். தோட்டக்காரன் காரோட்டிகளின் குடும்ப நிகழ்ச்சிகளிலும் முன்னின்று பங்கேற்று மகிழ்விப்பது இவரின் குணப்பண்பாகும்.

மனிதரில் மிக உயர்ந்த சான்றோரைக் குணமென்னும் குன்றேறி நின்றார்' என்று சிறப்பிப்பர் வள்ளுவர். டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமியை ஒரு குணக்குன்று என்று கூறலாம். இவருடைய பண்பாடு குறித்து,

“பெறற்கரிய பாட்டனாரின் தீர்க்கதரிசனம், மதிநலம் பெருமைமிகு தந்தையாரின் தளராத முயற்சி, இத்தகைய பண்புகள் ஒருங்கே அமைந்த திருஅவதாரமே எம் தலைவர் எம்.ஏ.எம். என் பேர் டாக்டர் எம்.ஏ.எம் பல பெருங்குணங்களின் கொள்கலனாவார்கள். ஒரு வெற்றிக்குரிய தலைமைக்குரிய குணங்கள் அவரிடம் குவிந்திருப்பதை நான் நினைந்து நினைந்து மகிழ்வதுண்டு. புகழ் பூத்த நிறுவனங்களின் தலைவரான அவர்கள் பால் நான் கண்ட பெருண்குணம் தன் கீழ்ப் பணிபுரிவர்களிடம் கொண்டுள்ள மிகுந்த நம்பிக்கையே ஆகும்.” [9] என்று கூறியுள்ள அறிஞரின் கருத்து இங்கு நினையத்தகும்.

விருந்தோம்பும் பண்பில் தனவணிகர் இல்லங்கள் ஒவ்வொன்றும் ஒரு அன்னசத்திரமாகத் திகழ்பவை. செல்வம் செழிக்கும் செட்டிநாட்டு அரண்மனை இரவலர் பசி தீர்க்கும் அன்னதான நிலையமாக விளங்கியதில் வியப்பிருக்க ஒன்றுமில்லை. எம்.ஏ.எம்.இராமசாமி பசிப்பிணி மருத்துவராக விளங்கியவர். அரண்மனைக்கு வரும் இரவலர்கள் மட்டுமல்ல, விருந்தினர்களும் அவர் அளிக்கும் விருந்தில் திக்கு முக்காடிப் போவார்கள்.

ஆன்மீக அறங்களும் கோவில் திருப்பணிகளும்

அண்ணாமலை அரசர் மரபுவழி வந்த எம்.ஏ.எம்.இராமசாமி இறைவுணர்விலும், ஆன்மீகத்திலும் அழுத்தமான பற்றுடையவர்கள். வள்ளல் பாரியைப் போல் ஆன்மிகப் பணிகளுக்கு ஏராளமாகக் கொடை அளித்துள்ளார். வடசபரி என்னும் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் இவர் எழுப்பிய ஐயப்பன் ஆலயமும், மேல் மருவத்தூர் ஆலயத்திலும் அன்னதானமளிக்க வழங்கிய பெருங்கொடையும் நகரத்தார்களின் சிவாலயப் பணிகளுக்கு வழங்கிய அறக்கொடைகளும் இவரது ஆன்மீகப் பணிக்குச் சான்றுகளாகும்.

எம்.ஏ.எம்.இராமசாமி,

"முத்தமிழ்க்கும் தொண்டர்

முதல்வர் அருமைமகன்

எத்திறத்தரையும் போற்றும்

இணையிலா பத்திமையார்"[10]

என்று பக்தியின் நிலைக்களனாக இருந்தார் என்பதை அறிய முடிகின்றது.

தொழில் துறையிலும் வணிகத்துறையிலும் ஈடுபாடு வந்த இவர் அடையாறு ஆனந்த விநாயகர் கோவில், தில்லைத் திருக்கோயில்களுக்கும் பல லட்ச ரூபாய் நன்கொடை வழங்கினார்.

டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி மிகுந்த ஐயப்ப பக்தர். மாலை அணிந்தவுடன் தான் ஐயப்பனாகவே மாறி அதற்குரிய நியமங்கள் அனைத்தையும் முறையாகக் கடைபிடித்து வருபவர். 1976ஆம் ஆண்டு. கேரள மாநிலத்தில் உள்ள சபரிமலைக்கு ஐயப்பனை வழிபடச் சென்றார். வழிபாடு செய்து கொண்டிருக்கையில் இதுபோன்ற கோயில் ஒன்றைக் கட்டவேண்டும் என எண்ணமிட்டு ஊர் திரும்பினார்.

கேரளாவிலுள்ள அதே வடிவம், அளவுகொண்ட ஐயப்பன் கோவிலை அடையாறு பகுதியில் கட்டினார். இது இன்று தமிழகத்தில் வடசபரியாக உள்ளது. சிதம்பரம் அண்ணாமலை நகரிலும் ஐயப்பன் கோவிலைக் கட்டியுள்ளார். இதனால் வில்களுக்கு இவர் செய்துள்ள அறப்பணிகள் விளங்கும். ஐயப்பன் கோவில் அமைந்த வரலாற்றைத் தூது இலக்கியம்

“ஐயப்பன் கோவில்

அமைத்த தகவாளர்

செய்த அரண்மனைக்குள்

சேர்த்திருது”[11]

என்பதனால் தலைவி வாயிலாக அதன் சிறப்பை அறிவிக்கின்றார் ஆசிரியர்.

கல்வி அறக்கட்டளைகள்

அண்ணாமலை அரசர் காலந்தொட்டு கல்வி அறக்கட்டளைகள் தொடங்கி முத்தையவேள் அவர்களின் காலத்தில் வளர்ந்து எம்.ஏ.எம்.இராமசாமியான பாட்டுடைத் தலைவர் காலத்தில் செழித்து வருகின்றது. கல்விக்காகவே மூன்று பரம்பரைகள் பணியாற்றுவது அரசர் குடும்பந்தான் எனில் மிகையாகாது. இது ஓர் உலக சாதனையாகும்.ஃ

இராஜா சர் அண்ணாமலைச் செட்டியா அறக்கட்டளை இராஜா சர் அண்ணாமலைச் செட்டியா நினைவு அறக்கட்டளை 1956ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கலை, கல்வி, பொருளாதாரம், தமிழிசை, மருத்துவம் ஆகிய துறைகளில் தொண்டாற்றிய அறிஞர்க்கு ஆண்டுதோறும் 50,000 ரூபாய் வழங்கிச் சிறப்பிக்கின்றது. பாரதியார் விழா, வள்ளலார் விழாவையும் நன்முறையில் நடத்தி வருகின்றது. தந்தை முத்தையவேள் அவர்களை அடுத்து பாட்டுடைத் தலைவரும் இப்பணியைச் செய்து வருகின்றார்.

1957ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ராஜா சர் முத்தைய செட்டியார் கல்வி நிதி அறக்கட்டளையும் நன் முறையில் இயங்கி வருகின்றது. பல்தொழில் நுட்பம், இவ்வறக்கட்டளை வாயிலாக சென்னையில் மேல்நிலைப் பள்ளிகள் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இரண்டு, மூன்று தொடக்கப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. வசதியற்றோர்க்கு மருத்துவச் செலவும் செய்கின்றது.

இராணி மெய்யம்மை ஆச்சி செட்டிநாடு அறக்கட்டளை 1972ஆம் ஆண்டு முத்தையவேள் அவர்களால் நிறுவப்பட்டது. இதன் பொறுப்பையும் அரசர் எம்.ஏ.எம்.இராமசாமி செய்து வருகின்றார்.

தமிழ்நாடு கல்வி நிதி ஆட்சிக்குழு என்ற அறக்கட்டளை 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. உயர் கல்வி பயிலும் மாணவ மாணவியர்க்கு உதவித்தொகையும் விடுதியும் அமைத்துத் தந்து சிறக்கின்றது.

பொதுநலப் பணியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட அறக்கட்டளை. இதன் தலைவராக எம்.ஏ.எம்.இராமசாமி திகழ்கின்றார். இதில் கலை மன்றம், திருமண மண்டபம் என்ற இரு அமைப்புகளில் இயங்குவதாகும். மேற்சுட்டிய கருத்துக்களை,

…

மன்னரண் ணாமலையார்

மாட்சிமையார் - தன்பேரில்

ஏத்தும் இரண்டறக்

கட்டளைகள், சீதைமன்றம்

மாத்தந்தை பேரில்

மகிழ்வெள்ளம் பூத்தொளிர

மெய்யெட்டுக் கல்வி

நிறுவனங்கள்; அன்னையர்

மெய்யம்மை கட்டளை

வெல்லிங்டன்…

எனவும்,

… **செய்யறத்துக்**

கட்டளை பற்பலவாய்க்

கல்விக்கும் ஏழைகட்கும்

இட்டமுடன் செய்கின்றீர்”[13]

எனவும் தலைவி கூறுவதாக அமைத்துக் காட்டியுள்ள பாங்கை அறியமுடிகின்றது.

விளையாட்டு வீரர்

பாட்டுடைத்தலைவர் எம்.ஏ.எம்.இராமசாமி தனது இளமைப் பருவம் முதற்கொண்டே விளையாட்டுத்துறையில் ஈடுபாட்டுடன் இருந்தார். விவேகாநந்தா கல்லூரயில் பயிலும்போது டென்னிஸ் விளையாட்டில் பங்கு கொண்டு

பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற போட்டிகளிலும் தீவிரமாக ஈடுபட்டார். ஒற்றையர் ஆட்டத்தில் பலமுறை வெற்றி பெற்றுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளதால் அறியலாம்.[14]

ஹாக்கி விளையாட்டிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, இந்திய ஹாக்கிக் கழகம் உலக அளவில் புகழ்பெறுவதற்கு இவரே காரணம் எனலாம். 1975ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற உலக ஹாக்கிப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. அப்போது ஹாக்கிக் கழகத் தலைவர் எம்.ஏ.எம்.இராமசாமி என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். 1980ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியிலும் இக்குழு தங்கப்பதக்கம் பெற்றது. பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற இந்திய ஹாக்கிக் குழுவுக்கு இவர் இலட்சம் ரூபாய் பரிசு வழங்கிப் பாராட்டினார். பலமுறை ஹாக்கி அணி வெற்றி பெற்றதால் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி எம்.ஏ.எம்.இராமசாமியைப் பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[15]

போலோ விளையாட்டிலும் சிறப்புமிக்கவராக இருந்துள்ளார். இன்றும் தமிழ்நாடு பூப்பந்துக் கழகத்தின் தலைவராகவும் புரவலராகவும் இருந்தவர். தமிழ்நாடு கோல்ப் கழகத்தின் துணைத்தலைவராகவும், ஸ்போர்ட்ஸ் பவுண்டேஷன் தலைவராகவும் பணியாற்றி வந்தது சிறப்புத் தன்மையாகும்.

இவர் விளையாட்டுத் துறைக்கு ஆற்றியுள்ள அரும் பணிகளுக்காகவும் குவித்த வெற்றிகளுக்காகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 'னு.டுவை' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.[16]

மேற்சுட்டிய விளையாட்டுத்துறையின் செய்திகளை,

“போலோடென் னிஸ் ஹாக்கி

பூப்பந்து கால்பந்து

நாலும் தெரிந்து நற்

சாதனைகள் - கோலியவர்

ஹாக்கிக் கழக

அருந்தலைமை வெற்றிகளால்

ஹாக்கிமட்டை செங்கோலென் றாமிவர்க்கு”[17]

என்பதனால் புலப்படுத்தியுள்ளார்.

இராமசாமி அவர்கள் விளையாட்டுத்துறையில் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்ட துறை குதிரை சவாரியாகும். இவர் குதிரைப் பந்தயத்துறையில் வரலாறு படைத்துச் சாதனை (கின்னஸ்) புரிந்தவர். தலைச்சிறந்த இந்தியக் குதிரைப் பந்தய வீரர் எனப் புகழ் பெற்றவர். பந்தயக் குதிரைகளைக் காப்பதிலும் பேரார்வம் கொண்டவர்.

சென்னைக் குதிரைப் பந்தயக் கழகத் தலைவராக இருந்து வருகின்றார். இவரது பந்தயக் குதிரைகள் சென்னையில் கலந்து கொள்வது மட்டுமல்லாமல் பம்பாய், கல்கத்தா, பெங்களூர் போன்ற பெருநகரங்களிலும் கலந்து கொள்கின்றன. முதல் தரமான பந்தயங்களில் மட்டும் ஆயிரம் கோப்பைகளை இவர் பெற்றிருக்கிறார்.

இவருடைய சாதனையை, இராணி வார இதழ் உலகில் வேறு யாருடைய குதிரைகளும் இவ்வளவு பரிசுகளைக் குவித்தது இல்லை. இந்த வகையில் இவரது பெயர் உலக சாதனை ஏட்டில் (கின்னஸ்) இடம்பெற்றுள்ளது என பாராட்டியுள்ளதை எடுத்துக்காட்டுவர்.[18]

இந்நிகழ்வைக் கவிஞர் சௌந்தரா கைலாசம்,

“விளையாட்டு உலகத்தை வெற்றி கொள்ளும் மாவிருன்

பற்பலவாய்க் குதிரைகளின் பந்தயத்தில் ஜெயித்தமையால்

பொற்புடைய ‘கின்னஸ்’ எனும் புத்தகத்தில் இடம்

கொண்டார்.[19]

எனப் பாராட்டியுள்ளதையும் இணைத்துக் காட்டியுள்ளார்.

இவரது குதிரை வளர்ப்புப் பண்ணை சென்னை சோழவரம் சூரப்பட்டில் அமைந்துள்ளது. இப்பண்ணையின் மொத்த நிலப்பரப்பு 110 ஏக்கர். இப்பண்ணை முழுக்க முழுக்க கிராம சூழலில் அமைந்துள்ளது. இதில் 175க்கும் மேற்பட்ட குதிரைகள் தக்க பராமரிப்புடன் வளர்க்கப்பட்டு பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. இவற்றின் மதிப்பு பல கோடி ரூபாயாகும். குதிரைகளைப் பேணிக்காக்க மருத்துவமனையும் அங்கேயே உள்ளது. திறமைமிக்க மருத்துக் குழு ஒன்றும் செயல்பட்டு குதிரைகளைப் பேணிக்காக்கின்றனர். 350 பணியாளர்கள் பணியில் இருக்கின்றனர். குதிரைகளின் தேவைக்காகப் பால்பண்ணை ஒன்றும் கோழிப்பண்ணை ஒன்றும் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இந்நிகழ்வுகளை எம்.ஏ.எம்.இராமசாமி தமிழ் விடு தூது நூல்,

“நற் குதிரை பற்பலவும்

நன்கு வளர்த்து அன்னவற்றைப்

பொற்புமிகு பந்தயத்திற்

போக்கதலின் - மிக்குயந்த

எம்.ஏ.எம்.ஆர் அவர்கள்”[20]

எனவும்,

“கோடி மதிப்புக் குதிரை அதிபதி

நாடிவரும் ஈட்டு நீதிபதி - தேடிவரு”[21]

எனவும் பாவமைத்துப் பாடியுள்ளதால் அறியலாம்.

பல்கலைக் கழக வளர்ச்சியும் இணைவேந்தர் பொறுப்பும்

அண்ணாமலை அரசர், முத்தைய வேள் இருவரையும் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாட்டுடன் மாற்றங்கள் பல செய்து வெற்றிநிலையில் பல்கலைக்கழகத்தைக் கட்டிக் காப்பாற்றி வந்தவர். இவர் காலத்தில் பல புதிய பட்ட மேற்படிப்புகளும் பட்டப்படிப்புகளும் சான்றிதழ், பட்டய வகுப்புகளும், விரிவுபடுத்தப்பட்டன. பல் மருத்துவர் முதுகலை அறிவியல் வகுப்பு, தொலைதூரக் கல்வி இயக்ககம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டன. இராமசாமியின் ஆட்சிக் காலத்தில் மற்றொரு குறிப்பிடத்-தக்க ஒரு சாதனை மருத்துவக் கல்லூரி நிறுவியதாகும். தொடக்கத்தில் 300 படுக்கைகள் கொண்டதாக இருந்த மருத்துவமனை இப்போது 1500 படுக்கைகள் கொண்டதாகப் பெருவளர்ச்சி பெற்றுள்ளது.

இராமசாமி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக 1984ஆம் ஆண்டில் பொறுப்பேற்றார். அன்றிலிருந்து உலகப்புகழ் பெற்ற கல்வி நிலையமாகத் திகழ்கிறது. எம்.ஏ.எம். இராமசாமி தமது தந்தையர் காலத்திலேயே பல விழாக்களிலும், பல்கலைக்கழக சிறப்பு நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டவர்.

1955ஆம் ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழக வெள்ளிவிழா, 1979ஆம் ஆண்டு நடைபெற்ற பொன்விழா ஆகியவற்றிலும் பங்கு கொண்டு செயலாற்றினார். 1983ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனைத்திந்தியத்

துணைவேந்தர்கள் மாநாட்டில் அவர் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியுள்ளார். 1979ஆம் ஆண்டு பொறியியல் துறையில் கலை அரங்கம் ஒன்றைத் திறந்து வைத்தார்.

இராமசாமி இணைவேந்தராகப் பொறுப்பேற்றபின் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வைர விழா கண்டது. இப்போது பிளாட்டினம் விழாவும் நடைபெற்றுள்ளது. இவ்வாறு இவரது நன்முயற்சியால் நாளும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பல்வேறு நிலையிலும் வளர்ச்சி பெற்று வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

இராமசாமி தமிழ் விடுதூது நூலில் தலைவி கூற்றாக,

“இணையரசர் வேறெங்கும்

இந்நிலத்தில் யாரும்

இணையில்லாப் பேரரசர்

என்னுள்” [22]

எனவும்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - அண்ணல் என்

காதலன் சொத்து கவின்புலமை வித்து, புதும்

போதனைகள் வைக்கும் புனிதமது - சேதமிலா

... ...[23]

எனவும்

“வெள்ளிவிழாப் பொன்விழா

வைரவிழாக் கண்டபினும்

எள்ளா இளமைநலம்

ஏற்றுள்ள - துள்ளமென்ம்” [24]

எனவும் பாடியிருப்பன சிந்தைக்கு விருந்தாகும்.

தமிழ்ப்பணி

இராமசாமி அவர்கள் தமிழ்த்தொண்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். தமிழ்ப்பணியையும் தமிழிசைப் பணியையும் எவ்வித குறைபாடும்

இல்லாமல் ஆண்டுதோறும் செம்மையாக நடத்திவருகின்றார். இவர் இணைவேந்தரான பின்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் எழுத்தாளர் மாநாடு, தமிழகப் புலவர் குழுக் கூட்டம் ஆகியவை நடத்தப்பட்டன.

இசைப்பேரறிஞர் மீ.ப.சோமசுந்தரம் எழுதிய சித்தர் இலக்கியம். மா.பொ.சிவஞானத்தின் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற நூலின் ஆங்கில மொழியாக்கம், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமி பிள்ளையின் திருவருட்பா உரைவிளக்கம் ஆகிய நூல்கள் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

"……… இக்கழகம்

ஓர் யாழையும் அற்றதுவாய்

ஒப்பற்ற பன்னூல்கள்

பார்போற்ற நல்குமிதன் பண்புகளை" [25]

என்பதால் நூல்பதிப்புச் செய்திகளை உணரலாம்.

ஆய்வுக் கருத்தரங்கம் பற்றிய சிந்தனையும் இராமசாமி அவர்களுக்கு இருக்கின்றது. இதனை,

"ஆய்வுக் கருத்தரங்கம்

ஆயிரம் கண்ட இடம்

மாய்வில் புதுப்புதுமை

மல்குமிடம்…"[26]

எனக் குறிப்பிட்டுள்ளதால் அறியலாம்.

தொழிலதிபர் இராமசாமி

தொழிலதிபர் தன்மையும் முன்னோடிகளை இனங்காட்ட, அவர்களைவிட விஞ்சிய நிலையில் தொழிலதிபராக விளங்கி வருகின்றார். இதனை,

"செட்டிநாடு கிரானைட் செழும் மதுரா கோட்சும்அம்

செட்டிநாடு சீமைமண் சீர்காபி-வட்டி

குரோவரீட்டு கெம்மாய் இண்டாக் உற்பத்தி

ஏரோமெட்டல் பொன்னி இனிப்பு வரோதயனார்" [27]

என்பதனால் செட்டிநாடு கிரானைட் நிறுவனம், மதுரா கோட்ஸ் நிறுவனம், செட்டிநாடு சிமெண்ட் நிறுவனம், கன்சாலிடேட் காபி நிறுவனம் ஆகியவற்றின் இயக்குநர் குரோவர் ஈட்டு நிதி நிறுவனம் கெம்பாப் அல்கலி நிறுவனம், இன்டாக் உற்பத்தி நிறுவனம், எரோமெட்டல் ஸ்டோன் நிறுவனம், பொன்னி சர்க்கரை ஆலை ஆகியவற்றின் இயக்குநராக இருந்து தொழில் அதிபராகத் திகழ்ந்தவர் இன்று நம்மிடம் இல்லை என்றாலும் அவர் புகழை உயர்ந்திருக்கும் கல்விக் கோயில்கள் பேசிக் கொண்டே இருக்கும்.

இராமசாமி அவர்கள் இளமை முதற்கொண்டே பன்முகச் சிறப்புகள் கொண்டவராகத் திகழ்ந்துள்ளார். தொடக்கக் கல்வியையும் பட்டப்படிப்பையும் சென்னையில் மேற்கொண்டார். கல்வியில் ஆர்வம் மிக்கவராக எப்போதும் திகழ்ந்துள்ளார். இராமசாமி அவர்கள் 1952ஆம் ஆண்டு சிகப்பி ஆச்சியை மணந்தார். இல்வாழ்க்கையிலும் சிறப்பாக வாழ்ந்து வந்தவர். அண்ணாமலை அரசர், முத்தைய வேள், பண்பு நலன்களுடன் இவருடன் விளங்குவது செட்டிநாட்டு மரபுக்கு இலக்கணமாகும். இராமசாமி அவர்கள் பணியாளர் என்ற பாகுபாடு பாராது விளங்கும் மனிதநேயமிக்கவர். ஆன்மிக அறங்கள் பல புரிந்தவர். ஐயப்பன் கோவில்களைக் கட்டுவித்தவர். பல்வேறு கோவில்களுக்குக் குடமுழுக்கு விழா நடத்துவதற்குக் கொடையளித்துள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகமில்லாது எட்டு கல்வி அறக்கட்டளைகளையும் செம்மையாக நடத்தி வந்தவர். பொது நலப் பணிகளிலும் அளப்பரிய உதவிகளைச் செய்து வருபவர்.

மிகச்சிறந்த விளையாட்டு வீரராகவும், குதிரைப் பந்தய உலக சாதனையாளராகவும் இருந்து வந்தவர். விளையாட்டுத் துறையின் செயலூக்க, வெற்றிப் பெருமிதத்திற்காக டி.லிட். பட்டம் வழங்கி சிறப்பிக்கப்பெற்றவர். இந்திய ஹாக்கி அணியினை உலகம் உணரச் செய்தவர். குதிரை வளர்ப்பு மையம் ஏற்படுத்தி உலக சாதனை புரிந்துள்ளார்.

முடிவுரை

அண்ணாமலைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்காக துறைகளின் வளர்ச்சிக்காக எப்போதும் பாடுபட்டு வந்தவர். இவர் பல புதுத் துறைகளை உருவாக்கியுள்ளார். குறிப்பிடத்தக்க சாதனைகள், தொலைதூரக் கல்வி இயக்ககம், மருத்துவக் கல்லூரிகளாகும். இவ்வாறு பல்வேறு பன்முகச் சிறப்புகளைப் பெற்று உலகில் சிறப்பிடம் பெற்ற மனிதராக வாழ்ந்து மறைந்தாலும் கல்வி அளித்த சாதனையால் அவர் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதாய் உணர்கிறேன்.

சான்றெண் விளக்கம்

1. துரை. பட்டாபிராமன், இணைவேந்தர் மூவர், பிரியா பதிப்பகம், சிதம்பரம், மு.ப.1998, ப.12.
2. புறநானூறு
3. துரை.பட்டாபிராமன், இணைவேந்தர் எம்.ஏ.எம்.இராமசாமி தமிழ்விடு தூது பாடற்கண்ணி, 48, ப.14.
4. திருக்குறள்.
5. துரை.பட்டாபிராமன், இணைவேந்தர் எம்.ஏ.எம்.இராமசாமி தமிழ்விடு தூது பாடற்கண்ணி, 150, ப.438.
6. மேலது, பாடற்கண்ணி, 82, ப.26.
7. துரை. பட்டாபிராமன், இணைவேந்தர் மூவர், ப.47.
8. இராமசாமி தமிழ் விடு தூது, பாடற்கண்ணி, 180, ப.48.
9. துரை.பட்டாபிராமன், இணைவேந்தர் மூவர், ப.52.
10. துரை.பட்டாபிராமன், இராமசாமி தமிழ்விடு தூது, பாடற்கண்ணி, 62, ப.19.
11. மேலது, பாடற்கண்ணி, 148, ப.48.

துணைநூற்பட்டியல்

1. துரை.பட்டாபிராமன், இணைவேந்தர் மூவர், பிரியா பதிப்பகம், சிதம்பரம், மு.ப.1998.
2. துரை.பட்டாபிராமன், இணைவேந்தர் எம்.ஏ.எம்.இராமசாமி தமிழ்விடு தூது பாடற்கண்ணி.